ரோக்மா இலவச அஞ்சல்வழி வேதாகமக் கல்வி

தபால் பெட்டி எண் - 9, No.8, பாரதியார் 2 வது தெரு, S.S. காலனி மதுரை – 10. Ph. 0452 – 4354302

# நம்முடைய பாக்கியமான நம்பிக்கை

**முன்னுரை :**

9–வது பாடத்தில் சபை எடுத்துக்கொள்ளப்படுதலைப் பற்றி நாம் ஓரளவுக்கு படித்தோம். விசுவாசிகளின் எதிபார்ப்பில் சபை எடுத்துக் கொள்ளப்படுதல் என்பது மெய்சிலிர்க்க வைக்கும் ஒரு காரியமாக இருந்தாலும் தீத்துவுக்கு எழுதின நிரூபத்திலே பவுல் குறிப்பிடுகிற காரியத்தின் ஒரு பகுதியே ஆகும். "நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும் மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும்" (தீத்து 2:13) நம்முடைய எதிர்காலத்தை குறித்ததான தேவனுடைய திட்டம் அனைத்தையும் உள்ளடக்கியதாக இருக்கிறது. இந்த பாக்கியமான நம்பிக்கை. கிறிஸ்துவின் வருகையானது சகல பரிசுத்தவான்களுக்காக, பரிசுத்தவான்களோடு அவர் களுடைய ஆசீர்வாதங்களும், வெற்றிகளும் கூட சேர்ந்து வருகிறது என்பதே நமது பாக்கியமான நம்பிக்கையாகும். இந்த நம்பிக்கையின் முழு விளக்கத்தையும் நாம் பார்க்காவிட்டாலும், அவருடைய வருகையில் விசுவாசிகளுக்கு பாக்கியமான நம்பிக்கையைக் கொடுக்கிற சில முக்கியமான வாக்கியங்களை மட்டும் பார்ப்போம்.

## இப்பாடத்தின் முக்கியத்துவம் :

எபேசியர் 2:12–ல் பவுல் எபேசியரை பற்றி எழுதும்போது "அக்காலத்திலே கிறிஸ்துவைச் சேராதவர்களும். . . நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்தீர்களென்று நினைத்துக்கொள்ளுங்கள்" என்று எழுதுகிறார். இது இப்போதைய உலகத்திலே இலட்சக்கணக்கானோர் நம்பிக்கை இல்லாதவர்களாகவும் நம்பிக்கை இழந்தவர்களாகவும் வாழ்வதை எவ்வளவு அழகாக குறிக்கிறது. கிறிஸ்தவ நாடாகிய அமெரிக்காவில் கூட, மரண பள்ளத்தாக்கை பயத்தோடும், பரலோகத்தைக் குறித்ததான நம்பிக்கை தங்கள் இருதயத்திலே இல்லாமலும், ஏராளமானவர்கள் சென்று அடைந்துக் கொண்டிருக்கிறார்கள். நீதிமொழிகள் 11:7 கூறுகிறது, "துன்மார்க்கன் மரிக்கும் போது அவன் நம்பிக்கை அழியும். . ."

ஒரு மனிதன் தனக்கு நம்பிக்கை உள்ளமட்டும் வாழ்கிறான், சகிக்கிறான் போராடுகிறான். 1 தெசலோனிக்கேயர் 4:13, ". . . நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப்போலத் துக்கித்து அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை" என்பது இயேசுகிறிஸ்துவின் மீது நம்பிக்கை வைத்திருக்கிற ஒவ்வொரு மனிதனுக்கும் மிகவும் பாக்கியமான வார்த்தை ஆகும். மறுபடியும் பிறந்த ஒவ்வொரு விசுவாசியும் தன் இருதயத்தில் நம்பிக்கை, மகிமையான எதிர்காலத்தின் நம்பிக்கை, பரலோகத்தின் நம்பிக்கை என்பவை ஆகும். கிறிஸ்துவை பார்த்து அவரோடு இருக்கும் நம்பிக்கை, புதிய சரீரம் பெறப்போகிற நம்பிக்கை, புதிய வீடு, புது வாழ்வு, புது சூழ்நிலை இவைகள் எல்லாம் ஒரு விசுவாசியின் வாழ்விலே பாக்கியமான, மகிழ்ச்சியான நம்பிக்கை என்று அழைக்கப்படுவதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. இந்தப் பாடத்திலே இந்த நம்பிக்கையைக்குறித்து படிப்பதே நமது நோக்கம் ஆகும்.

## பாடம்

### I. நமது பாக்கியமான நம்பிக்கைக்கான உறுதிகள் :

**அ. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் உண்மை :**

மறுக்க முடியாத அநேக சான்றுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன (அப்போஸ்தலர் 1:3; ரோமர் 1:5, வெளி. 1:18). 4–வது பாடத்தையும் பார்க்கவும்.

**ஆ. கிறிஸ்துவின் வருகையைப்பற்றி புதிய ஏற்பாட்டில் கூறப்பட்டிருக்கிற அநேக சான்றுகள் :**

1. கிறிஸ்துவின் வருகையைப்பற்றி புதிய ஏற்பாட்டில் 318 குறிப்புகள் காணப்படுகின்றன.
2. 25 வசனத்திற்கு ஒருமுறை காணப்படுகிறது.
3. முதல், இரண்டாம் தெசலோனிக்கேயரிலும், வெளிப்படுத்தின விசேஷம் முழுவதிலும் காணப்படுகிறது.

**இ. தீர்க்கதரிசிகளினால் முன்னதாக கூறப்பட்ட காரியங்கள் :**

ஏசாயா 40:10 – "இதோ, கர்த்தராகிய ஆண்டவர் பராக்கிரமசாலியாக வருவார். . ."

சகரியா 14:5,9 – "என் தேவனாகிய கர்த்தர் வருவார்; தேவரீரோடே எல்லாப் பரிசுத்தவான்களும் வருவார்கள். . . கர்த்தர் பூமியின் மீதெங்கும் ராஜாவாயிருப்பார்."

சங்கீதம் 24:9 – "வாசல்களே உங்கள் தலைகளை உயர்த்துங்கள்; அநாதி கதவுகளே உயருங்கள், மகிமையின் ராஜா உட்பிரவேசிப்பார்."

**குறிப்பு :**

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள் முதலாவது கிறிஸ்துவின் வருகையோடு இஸ்ரவேலரின் எதிர்காலத்தின் மகிமையடைதலையே குறிக்கிறதாக இருக்கிறது. புதிய ஏற்பாட்டு சபை விசுவாசிகள் அனைவரும் இந்த மகிமையான எடுத்துக் கொள்ளப்படுதலில் பங்கடைவார்கள் என்பதை தெளிவுபடுத்துகிறது (ரோமர் 8:17; கொலோசெயர் 3:4; வெளி. 5:10).

**ஈ. வாக்குத்தத்தங்களில் அழுத்தமாக பயன்படுத்தப்பட்ட வார்த்தைகள் :**

1. யோவான் 14:3 – "நான் போய். . . நான் மறுபடியும் வந்து. . ."
2. 1 தெசலோனிக்கேயர் 4:16 – "கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும் பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார். . . "
3. அப்போஸ்தலர் 1:11 – "இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ அப்படியே மறுபடியும் வருவார்."
4. எபிரெயர் 9:28 – ". . . தமக்காக காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும் படி இரண்டாம் தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்".

**குறிப்பு :**

புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை மிகவும் அதிகாரப்பூர்வமாகவும், உறுதியாகவும் முழு நிச்சயத்தோடும் அறிவிக்கிறார்கள்.

**உ. இரண்டு வருகைக்கும் உள்ள வித்தியாசங்கள் :**

1. லூக்கா 2:7–ஐ லூக்கா 21:27 உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்.
2. மத்தேயு 1:21–ஐ மத்தேயு 24:30 உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்.

**குறிப்பு :**

இங்கு இரண்டு வருகைகளும் தெளிவாகக் கூறப்படுகிறது. முதல் வருகையில் தாழ்மையின் கோலத்தில் குழந்தையாக அவதரித்தார். இரண்டாவது வருகையில் வல்லமையோடும், பிரதான மகிமையோடும் அவர் வெளிப்படுவார்.

**ஊ. மூன்று நம்பத்தகுந்த சாட்சிகள் :**

1. கிறிஸ்து தாமே கூறினார் : யோவான் 14:3 – "நான் மறுபடியும் வருவேன்."
2. தூதர்களின் சாட்சி : அப்போஸ்தலர் 1:11 – ". . . இந்த இயேசுவானவர் . . . மறுபடியும் வருவார்."
3. அப்போஸ்தலர்களின் சாட்சி : 1 தெசலோனிக்கேயர் 4:16 – "கர்த்தர் தாமே . . . வானத்திலிருந்து இறங்கி வருவார்."

**குறிப்பு :**

கிறிஸ்துவின் இரண்டாம் வருகை என்பது கீழே குறிப்பிடப்படுபவைகள் அல்ல.

1. பரிசுத்தாவியானவரின் வருகை அல்ல. கிறிஸ்துவின் வருகையைக் குறித்து கூறப்பட்ட காரியங்களில் அநேகம் பெந்தெகொஸ்தே நாளுக்குப்பின் கூறப்பட்டவைகள் ஆகும். பெந்தெகொஸ்தே நாளில் கிறிஸ்து நம்மோடு இருக்கும்படியாக வந்தார். கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் அவர் நம்மை அவரோடு சேர்த்துக்கொள்ள வரப்போகிறார்.
2. மரணம் அல்ல, மரணத்தில் எக்காளம் ஊதப்படுவது கிடையாது. ஆரவாரம் கிடையாது. நாமும் எடுத்துக் கொள்ளப்படுவது கிடையாது.

## II. நமது பாக்கியமான நம்பிக்கையின் பெயர்கள் :

**அ. ஜீவனுள்ள நம்பிக்கை :**

1 பேதுரு 1:4 ". . . ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்." இது ஜீவனுள்ளது காரணம் கிறிஸ்து நமக்குள்ளே ஜீவிக்கிறார் (கலாத்தியர் 2:20). இது ஜீவனுள்ளது காரணம் நாம் யார் மீது நம்பிக்கை வைத்திருக்கிறோமோ அவர் "சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறவர்" (வெளி. 1:18).

**ஆ. நிலையான நம்பிக்கை :**

எபிரெயர் 6:19, ‘‘அந்த நம்பிக்கை நமக்கு நிலையும், உறுதியும் திரைக்குள் ளாகப் போகிறதுமான ஆத்தும நங்கூரமாயிருக்கிறது.’’ நிலையான தேவனுடைய வார்த்தையினாலும், உறுதியான தேவனுடைய வாக்குத்தத்தத்தினாலும் நம்முடைய நம்பிக்கையானது நங்கூரம் போடப்பட்டிருக்கிறது, தேவன் பொய் சொல்வது கூடாத காரியம் (எபிரெயர் 6:17,18)

**இ. மகிமையான நம்பிக்கை :**

கொலோசெயர் 1:27 ‘‘. . . கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்.’’ கிறிஸ்துவை நாம் அவருடைய மகிமையிலே காணுவோம் (யூதா 24). நாம் அவரைப் போல இருப்போம் (1 யோவான் 3:2). நாம் கிறிஸ்துவின் வருங்கால மகிமையிலே பங்கடைவோம் (ரோமர் 8:17,18; பிலிப்பியர் 3:21).

**ஈ. சுத்திகரிக்கிற நம்பிக்கை :**

1 யோவான் 3:3, ‘‘அவர் மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவ னெவனும் அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறது போல தன்னையும் சுத்திகரித்துக் கொள்ளுகிறான்.’’ கிறிஸ்துவின் வருகையில் நாம் வைத்திருக்கும் நிலையான நம்பிக்கை நம்மை சுத்திகரிப்பது போல வேறு எதுவும் நம்மை சுத்திகரிக்க முடியாது (1 யோவான் 2:28; தீத்து 2:11,12).

**உ. ஆறுதல் செய்யும் நம்பிக்கை :**

1 தெசலோனிக்கேயர் 4:18. ‘‘இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரை யொருவர் தேற்றுங்கள்.’’ கவலையுள்ள, பாரமான, வேதனையுள்ள தேவை மிகுந்த இருதயத்திற்கு இதைவிட பெரிய ஆறுதல் இல்லை (1 தெசலோனிக்கேயர் 5:10,11).

**ஊ. பாக்கியமான நம்பிக்கை :**

தீத்து 2:13 ‘‘நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்திற்கும். . .’’ பாக்கியம் என்ற வார்த்தை ஆனந்தத்தை குறிக்கிறது. கிறிஸ்துவின் மீது நம்பிக்கை உள்ளவர்களுக்கு எவ்வளவு சந்தோஷமான எதிர்பார்ப்பு, வாய்ப்பு காத்திருக்கிறது.

## III. பாக்கியமான நம்பிக்கையின் பிரதிபலன்கள் :

இரட்சிப்பு கிருபையினால் மட்டுமே உண்டு (எபேசியர் 2:8,9). பரலோகத்தை யாரும் வேறு எந்த முகாந்தரத்தினாலோ, முயற்சியினாலேயோ அடையவோ அல்ல சம்பாதிக்கவோ முடியாது. ஆனால் கிறிஸ்துவை விசுவாசித்து அவரைப் பின்பற்று கிறவனுக்கு விலையேறப்பெற்ற வெகுமதிகள் காத்துக் கொண்டிருக்கின்றன (வெளி. 22:12). பேதுரு நித்திய ராஜ்ஜியத்துக்குட்படும் பரிபூரண பிரவேசத்தைக் குறித்து குறிப்பிடுகிறார் (2 பேதுரு 1:10,11). 1 கொரிந்தியர் 3:14–ல் பவுல் இதே காரியத்தை இவ்வாறு எழுதுகிறார், ‘‘. . . ஒருவன் கட்டினது நிலைத்தால் அவன் கூலியைப் பெறுவான்.’’

**அ. நீதியின் கிரீடம் :**

2 தீமோத்தேயு 4:8, ‘‘இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக் கிறது. . . எனக்கு மாத்திரம் அல்ல, அவரது பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்.’’ இந்த பலன், நீதிக்காக இந்த உலகத்திலே போராடினவர்களுக்கு மாத்திரம் உரியது. 7–வது வசனத்தை கவனிக்கவும், யாருடைய வாழ்க்கை நீதிக்கு எடுத்துக்காட்டாக விளங்கியதோ, யார் நீதியை நேசித்தார்களோ அவர்களே கிறிஸ்துவின் வருகைக்காக ஆவலுடன் காத்துக் கொண்டிருந்தவர்கள் என்பதைக் காட்டுகிறது.

**ஆ. ஜீவகிரீடம் :**

வெளி. 2:10 ‘‘. . . நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்போது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்.’’ கிறிஸ்துவின் மேல் உள்ள அன்பினால் யார் யார் எல்லாவிதமான பரீட்சைகளையும் பொறுத்து வருகிறார்களோ அவர்களுக்கு இது வாக்குப் பண்ணப்பட்டிருக்கிறது (யாக்கோபு 1:12). இரத்தசாட்சியாய் மரிக்கிற ஒவ்வொருவனுக்கும் மகிமையான நித்தியஜீவன் காத்துக் கொண்டிருக்கிறது.

**இ. அழிவில்லாத கிரீடம் :**

1 கொரிந்தியர் 9:25, அழிவுள்ள கிரீடம் பந்தயத்தில் வெற்றி பெறுகிற ஒருவனுக்கு மட்டுமே கிடைக்கிறது என்று பவுல் குறிப்பிடுகிறார். ஆனால் அழிவில்லாத கிரீடம் ‘‘இலக்கை நோக்கி தொடர்கிற யாவருக்கும்’’ (பிலிப்பியர் 3:14), ‘‘விசுவாசத்தின் நல்ல போராட்டத்தை போராடுகிற யாவருக்கும்’’ (1 தீமோத்தேயு 6:12), ‘‘சட்டத்தின்படி ஓடுகிற யாவருக்கும்’’ (2 தீமோத்தேயு 2:5; எபிரெயர் 12:1,2) கிடைக்கிறதாயிருக்கிறது.

**ஈ. மகிமையுள்ள வாடாத கிரீடம் :**

1 பேதுரு 5:4, இந்த கிரீடம் மூப்பர்களுக்கும் தேவனுடைய மந்தையை மனப்பூர்வமாய், உண்மையாக போஷித்து, கண்காணிக்கிற யாவருக்கும் கொடுக்கப்படுகிறது (1 பேதுரு 5:1–3).

**உ. மகிழ்ச்சியின் கிரீடம் :**

1 தெசலோனிக்கேயர் 2:19 ‘‘எங்களுக்கு நம்பிக்கையும் சந்தோஷமும் மகிழ்ச்சியின் கிரீடமுமாயிருப்பவர்கள் யார்? இயேசுகிறிஸ்து வரும்போது, அவருடைய சந்நிதானத்திலே நீங்களல்லவா அப்படியிருப்பீர்கள்.’’ பவுல் தெசலோனிக்கேயரை ஆண்டரவருக்குள்ளாக வழிநடத்தினார். ஆகவே இந்த கிரீடம் ஆத்தும ஆதாயம் செய்பவர்களுக்கு உரியதாக உள்ளது. பாவிகளைக் கிறிஸ்துவிடம் நடத்துபவர்களுக்காகக் கொடுக்கப்படும் அருமையான வெகுமதி தான் இந்த மகிழ்ச்சியின் கிரீடம்.

**ஊ. நாம் கிறிஸ்துவின் வருகையின்போது எடுத்துக்கொள்ளப்படுவோம் :**

இது அதிக உண்மையானது (1 தெசலோனிக்கேயர் 4:17). ஒரு இமைப் பொழுதிலே நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம் (1 கொரிந்தியர் 15:51; பிலிப்பியர் 3:20,21), கிறிஸ்துவோடு என்றென்றும் இருக்கிற மகிழ்ச்சி (யோவான் 14:3), அவருடைய மகிமையின் சுதந்தரத்திலே பங்கடைகிறோம் (ரோமம் 8:17,18), கிறிஸ்துவோடு முழு உலகத்தையும் ஆளுகை செய்கிற சிலாக்கியம் பெறுகிறோம் (சகரியா 14:9; வெளி. 5:10). இவைகள் எல்லாம் நம்முடைய விசுவாசத்திற்கு கிடைக்கும் வெகுமதிகள் என்று கூறலாம்.

**எ. மனதில் கொள்ளவேண்டிய இரண்டு காரியங்கள் :**

1. நாம் விழிப்புள்ளவர்களாக இருக்க வேண்டும். ‘‘ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு’’ (வெளி. 3:11).
2. நாம் எவ்வளவு தகுதியற்றவர்கள் என்று உணர்ந்தவர்களாக நாம் கிறிஸ்துவின் பாதத்தில் நம்முடைய கிரீடங்களை சந்தோஷமாக வைக்க வேண்டும் (வெளி. 4:10).

## IV. நம்முடைய பாக்கியமான நம்பிக்கையின் தன்மையும் குணாதிசயமும் :

**அ. இது எழுத்தின்படி நடக்க இருக்கிறது :**

இயேசுகிறிஸ்துவின் வருகையானது அவருடைய மரணத்தில் நடந்தேறிய ஒன்று அல்ல. அல்லது, அது பரிசுத்தாவியாவனரின் வருகையும் கிடையாது. அவரது வருகையானது சரீரத்தோடும், தனிப்பட்ட முறையிலும் உண்மையாகவும் நடைபெறும். ‘‘நான் மறுபடியும் வருவேன்’’ (யோவான் 14:3). ‘‘இந்த இயேசுவானவர் . . . மறுபடியும் வருவார்’’ (அப்போஸ்தலர் 1:11). ‘‘கர்த்தர் தாமே . . . இறங்கி வருவார்’’ (1 தெசலோனிக்கேயர் 4:16).

**ஆ. இது உடனடியாய் நடக்கக்கூடியது :**

கிறிஸ்தவர்களாகிய நாம் நமது பாக்கியமான நம்பிக்கையைக் குறித்து எப்போதும் எதிர்பார்போடு இருக்கும்படியாக வைக்கப்பட்டிருக்கிறோம் (எபிரெயர் 9:28; 1 தெசலோனிக்கேயர் 1:10; 5:6; பிலிப்பியர் 3:20; தீத்து 2:13)

**இ. இது திடீரென்று நடக்கக்கூடியது :**

இது திடீரென்று, ஒரு நிமிஷத்திலே நடக்கும். நம்முடைய பாக்கியமான நம்பிக்கையின் அளவு நித்தியம் ஆகும். ஆனால் இந்த நம்பிக்கை நமக்கு நிறை வேறுவதோ ஒரு இமைப்பொழுதிலே இருக்கும் (1 கொரிந்தியர் 15:51). ‘‘ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப் பொழுதிலே’’ (1 தெசலோனிக்கேயர் 5:2,3), ‘‘திருடனைப்போல – எதிர்பாராத நேரத்தில்; மின்னல் பிரகாசிக்கிறதுபோல’’ (மத்தேயு 24:27) இருக்கும்.

**ஈ. இது இரண்டு பகுதியை உடையது :**

இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகை வேதாகமத்தில் இரண்டு பகுதிகளாகவே கூறப்பட்டிருக்கிறதை ஒவ்வொருவரும் ஞாபகத்தில் கொள்ள வேண்டும். முதலாவது, அவர் சபையை எடுத்துக் கொள்ளும்படியாக வான மேகத்தில் நமக்காக வருகிறார் (1 தெசலோனிக்கேயர் 4:16,17; யோவான் 14:3). இதன் பின்பு அவர் நம்மோடு கூட இந்த பூமிக்கு மிகுந்த வல்லமையோடும், மகிமையோடும் வருவார் (வெளி. 19:11–15; யூதா 14; கொலோசெயர் 3:4) மற்றும்,

1. அவர் வருகையின் முதல் கட்டத்தில் கிறிஸ்து வானமேகத்தில் இறங்கி வருவார். அப்போது மீட்கப்பட்ட கூட்டமாகிய சபையானது திடீரென்று பூமியிலிருந்து எடுத்துக்கொள்ளப்படும் (1 தெசலோனிக்கேயர் 4:16,17).
2. அவர் வருகையின் இரண்டாம் கட்டத்தில் கிறிஸ்து வெளியரங்கமாக இந்த உலகத்திற்கு நம்மோடு கூட வருவார் (வெளி. 1:7). பெரிய ஆரவாரத்தோடு வெளிப்படுவார் (மத்தேயு 24:26,27). வல்லமையோடும், மகிமையோடும் வெளிப் படுவார் (மத்தேயு 24:30). 1 தெசலோனிக்கேயர் 4:16,17–ஐ சகரியா 14:4,5 உடன் ஒப்பிட்டு பாருங்கள். யோவான் 14:3–ஐ மத்தேயு 25:31,32 உடன் ஒப்பிட்டு பாருங்கள்.

**குறிப்பு :**

இந்த இரண்டு கட்டங்களுக்கும் இடைப்பட்ட காலம் உண்டு. அந்த இடைக்காலத்தில் மிருகம் அல்லது அந்திகிறிஸ்து எழுந்து ஆட்சி செய்யவும் (வெளி. 13:1–5), கிறிஸ்துவின் நியாயாசனத்தின் முன் விசுவாசிகள் வெளிப்படவும் (2 கொரிந்தியர் 5:10), அர்மகெதோன் யுத்தம் நடைபெறவும் அனுமதிக்கப்படும் (வெளி. 16:14–16).

**ஏ. வெளிப்படும் தெய்வீக வல்லமை :**

நம்முடைய நம்பிக்கை, ஆண்டவர் தன்னுடைய வல்லமையை வெளிப்படுத்து வதற்கான சந்தர்ப்பமும் உள்ளடக்கியதாய் இருக்கிறது.

i) கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் ஒவ்வொருவரையும் உயிர்த்தெழப் பண்ணும் வல்லமை (1 தெசலோனிக்கேயர் 4:16; 1 கொரிந்தியர் 15:52).

ii) நம்முடைய சரீரத்தை அழியாமையுள்ள, அவருடைய சரீரத்திற்கு ஒப்பான சரீரமாக மறுரூபமாக்கும் வல்லமை (பிலிப்பியர் 3:21; 1 யோவான் 3:2; 1 கொரிந்தியர் 15:51–52).

iii) புவிஈர்ப்பு சக்தியை மேற்கொள்ளும் வல்லமை – நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள் மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு. . . (1 தெசலோனிக்கேயர் 4:17) எண்ணிலடங்கா தேவனுடைய பிள்ளைகள் ஒரே நேரத்தில் எழுந்திருப்பார்கள்.

iv) உலக தேசங்களை உடைத்து அதின் படைபெலத்தை அழிக்கும் வல்லமை (தானியேல் 2:34–35 ; 44:45; சங்கீதம் 2:8–9; வெளி. 19:15–20).

v) சாத்தானை கட்டிப்போட்டு, மிருகத்தை அல்லது அந்தி கிறிஸ்துவை மேற்கொள்ளும் வல்லமை (வெளி. 20:1–3; 2 தெசலோனிக்கேயர் 2:8; வெளி. 19:19–20).

1. புறஜாதியாருடைய ஆளுகைக்கு முடிவுண்டாக்கி (ரோமர் 11:25; அப்போஸ்தலர் 15:14–17), உலக ராஜ்யங்கள் யாவற்றையும் தேவனுடைய ஆளுகைக்குள் கொண்டுவரும் வல்லமை (வெளி. 11:15; சகரியா 9:10).
2. விலங்கினங்களின் கொடூரத்தன்மையையும், பூமியின் மீதான சாபத்தையும் நீக்கும் வல்லமை (ஏசாயா 11:2–10; ரோமர் 8:19–22).
3. யுத்தத்தை ஒழித்து, சமாதானமும், நீதியுமான ராஜ்ஜியத்தை உலக முழுவதிலும் ஏற்படுத்தும் வல்லமை (ஏசாயா 55:13; 35:1,2; 65:25; ஏசாயா 9:6,7; சங்கீதம் 2:8,9; சகரியா 14:9; ஏசாயா 2:4; வெளி. 20:4 ஏசாயா 11:9).

## VI. நம்முடைய பாக்கியமான நம்பிக்கையின் எதிர்பார்ப்புகள் :

i) கர்த்தர் தாமே நமக்காக இறங்கி வருவார் (1 தெசலோனிக்கேயர் 4:16).

ii) அவர் நம்முடைய சரீரங்களை ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே தன்னுடைய சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார் (1 கொரிந்தியர் 15:51–53; பிலிப்பியர் 3:20–21; 1 யோவான் 3:2).

iii) கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் அழிவில்லாத சரீரம் உள்ளவர்களாய் எழுப்பப்படுவார்கள் (1 கொரிந்தியர் 15:42–44, 51–57)

iv) நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக மேகங்கள் மேல் ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம் (1 தெசலோனிக்கேயர் 4:17; யோவான் 14:3).

v) நாம் கிறிஸ்துவின் மகிமையிலே பங்கடைந்தவர்களாக என்றென்றும் அவரோடுகூட இருப்போம் (2 கொரிந்தியர் 5:8; பிலிப்பியர் 1:23; ரோமர் 8:17,18).

vi) சரீரத்திலே அவனவன் செய்த கிரியைகளுக்குத்தக்க பலனை அடைவோம் (2 கொரிந்தியர் 5:10; 1 கொரிந்தியர் 3:13–15; 2 தீமோத்தேயு 4:8; 1 பேதுரு 5:4; கொலோசெயர் 3:24–25; ரோமர் 14:10–13).

vii) பரலோகத்தில் இருக்கிற நமது மணவாளனோடு நாம் இணைக்கப்படப்போகிறோம் (ஆட்டுக்குட்டியானவரின் கலியாணம்) – எபேசியர் 5:23–32; வெளி. 19:7–9.

viii) அவர் மறுபடியும் பூமிக்கு வரும்போது நாமும் அவரோடு கூட வருவோம் (யூதா 15; கொலோசெயர் 3:4; வெளி. 19:14). தம்முடைய பரிசுத்த வான்களில் அவர் மகிமைப்படுவார் (2 தெசலோனிக்கேயர் 1:9).

ix) நாம் அவரோடு கூட பூமியை ஆயிரம் வருஷம் ஆளுகை செய்வோம் (வெளி. 5:10; 20:4–6).

x) இந்த வானமும் பூமியும் அழிந்து, பின்பு உண்டாக்கப்படும். புதிய வானத்தில் நாம் ஆண்டவரோடுகூட வாழுவோம் (வெளி. 21:1–4).

## VII. நமது பாக்கியமான நம்பிக்கையின் நேரம் :

கிறிஸ்துவின் வருகையின் நாளையோ, நாளிகையையோ மக்கள் அறியாதிருக்கும் போது அவர் வருவார் (அப்போஸ்தலர் 1:7; மத்தேயு 24:36). கிறிஸ்துவின் வருகை இப்போதே இருக்கும் என்ற நம்பிக்கையோடு கிறிஸ்தவர்கள் வாழவேண்டுமென உற்சாகப்படுத்தப்படுகிறோம். வேதாகமத்திலே அவருடைய வருகையின் போது என்ன அடையாளங்கள் தோன்றும் என்பது தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றன.

i) சமாதானம், சவுக்கியம் உண்டாகும் என்று மக்கள் சொல்லும்போது அவர் வருவார் (1 தெசலோனிக்கேயர் 5:3; எரேமியா 6:14).

ii) மக்கள் எதிர்பாராதிருக்கும் போதும், பரியாசக்காரர் இதை பரியாசம் செய்யும் போதும் அவர் வருவார் (1 தெசலோனிக்கேயர் 5:2; 2 பேதுரு 3:3–9).

iii) பூமியின் மேலுள்ள ஜனங்களுக்கு தத்தளிப்பும், இடுக்கணும் உண்டாகும்போது (லூக்கா 21:25).

iv) பூமியின் மேல் வரும் ஆபத்துகளுக்கு பயந்து மனுஷனுடைய இருதயம் சோர்ந்து போகும்போது (லூக்கா 21:25,26)

v) நோவாவின் காலத்தில், லோத்தின் காலத்தில் நடந்தவைகள் போலவே அவர் வரும்போதும் நடக்கும் (லூக்கா 17:26–30). இந்த காலங்கள் இப்படி விவரிக்கப்பட்டுள்ளது : சுய அடக்கம் இல்லாமை, திருமண வாழ்வில் ஒழுக்கக் கேடு, பால் உணர்வு முறைகேடுகள், வன்முறைகள், நீதியில் ஒழுக்கக்கெடுகள், சட்டம் மீறுதல்கள், தேவனுக்கு எதிர்த்து போராட்டம்.

vi) இது விசுவாசிகளும் வழுவிப்போகிற காலமாயிருக்கும் (லூக்கா 18:9; 2 தீமோத்தேயு 3:1–5 1 தீமோத்தேயு 4:1; 2 பேதுரு 2:1).

vii) தேவன் குறித்த நேரத்தின் போது (மத்தேயு 24:36), புறஜாதியாரின் காலம் நிறைவாகும் போது (லூக்கா 21:24; அப்போஸ்தலர் 15:14), அல்லது புறஜாதியாருடைய நிறைவு உண்டாகும் போது (ரோமர் 11:25), இந்த காலத்தைக் குறித்தும், சபையைக் குறித்தும் தேவன் வைத்திருந்த நோக்கம் உணரப்படும் போது (எபேசியர் 3:10,11; 1:10–14).

**முடிவுரை :**

**நாம் செய்ய வேண்டியது என்ன?**

அ. அவர் வரும் வரை வேலை செய்யுங்கள் (லூக்கா 19:13).

ஆ. நிலைத்திருங்கள் (1 கொரிந்தியர் 15:58).

இ. அவர் வருகையினால் தேற்றப்படுங்கள் (1 தெசலோனிக்கேயர் 4:18).

ஈ. விழித்துக் கொண்டு, தெளிந்தவர்களாக இருக்கக்கடவோம் (1 தெசலோனிக்கேயர் 5:6; மத்தேயு 24:42).

உ. சுத்தமாயிருங்கள் (1 யோவான் 3:2,3).

**இதுவரை நீங்கள் இரட்சிக்கப்படவில்லை என்றால் :**

1. உன் தேவனை சந்திக்க ஆயத்தப்படு (ஆமோஸ் 4:12).
2. பரியாசத்தை நிறுத்துங்கள் (2 பேதுரு 3:3–4).
3. கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள் (ஏசாயா 55:8).
4. அவர் வரும்போது ஆயத்தமாயிருங்கள் (மத்தேயு 24:44).

"கர்த்தராகிய இயேசுவே வாரும்" (வெளி. 22:20)

**மாணவர் கவனத்திற்கு :**

1. வேகமாக இப்பாடத்தை மாத்திரம் படிப்பதினால் வேத அறிவோ அல்லது ஆவிக்குரிய வளர்ச்சியோ உண்டாகாது.
2. விடைத்தாள்களில் உங்கள் விடைகளை அளிக்கு முன்னதாக பாடத்தையும், கேள்விகளையும் தெளிவாகப் புரிந்துகொண்டீர்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

# நம்முடைய பாக்கியமான நம்பிக்கை

*ஒவ்வொரு மாணவரும் பதில் அளித்து அனுப்ப வேண்டிய முகவரி*

*இயக்குனர், ரோக்மா இலவச அஞ்சல் வழிக் கல்வி, தபால் பெட்டி எண் - 9, மதுரை - 625 010.*

**[பூர்த்தி செய்த பின்பு விடைத்தாளை மட்டும் தனிப்படுத்தி தபாலில் அனுப்பவும்]**

**சரியான விடையை வட்டமிட்டு ○ காட்டவும்**

1. விசுவாசியின் பாக்கியமான நம்பிக்கையின் தன்மை என்ன ?
   a. எதிர்காலத்தை நோக்கியிருப்பதாகும்
   b. கிறிஸ்து ஆயிர வருட அரசாட்சியை ஸ்தாபிக்கும் காலமாகும்
   c. கிறிஸ்து தம்முடைய பிள்ளைகளை தம்மண்டை சேர்த்துக்கொள்ள வருவதும், பின்பு தம்முடைய பிள்ளைகளுடன் பூமிக்கு திரும்பி வருவதும்
2. அவிசுவாசியின் வருங்கால நம்பிக்கை என்ன ?
   a. பரலோகத்திற்கு ஒருநாள் போவார் என்ற நம்பிக்கை
   b. நம்பிக்கை இல்லை
   c. தனது நற்கிரியையில் நம்பிக்கை
3. நமது நம்பிக்கை ஜீவனுள்ள நம்பிக்கை என்று அழைக்கப்படுகிறது. காரணம்,
   a. நம்பிக்கையோடு வாழ்ந்து கொண்டிருக்கிறோம்
   b. கிறிஸ்து நமக்குள் ஜீவிக்கிறார், நமக்காக திரும்பவும் வருகிறார்
   c. வேதாகமம் பயன்படுத்தும் வார்த்தையாகும்
4. நீதியின் கிரீடம் யாருக்கு கொடுக்கப்படும் ?
   a. ஆத்தும ஆதாயம் செய்பவர்களுக்கு
   b. அவரின் வருகையை எதிர்பார்ப்பவர்களுக்கு
   c. இலக்கை நோக்கித் தொடருபவர்களுக்கு
5. மகிழ்ச்சியின் கிரீடம் யாருக்கு கொடுக்கப்படும் ?
   a. ஆத்தும ஆதாயம் செய்பவர்களுக்கு
   b. அவரின் வருகையை எதிர்பார்ப்பவர்களுக்கு
   c. இலக்கை நோக்கித் தொடருபவர்களுக்கு
6. நமது பாக்கியமான நம்பிக்கை எப்படிப்பட்டது ?
   a. உண்மையானது
   b. நல்ல ஜீவியம் செய்ய உதவுவது
   c. இந்தப் பூமியில் நமக்கிருக்கும் சந்தோஷம்
7. பாக்கியமான நம்பிக்கையின் காரியங்கள் எப்பொழுது ஆரம்பிக்கும் ?
   a. எந்த நேரத்திலும் ஆரம்பிக்கலாம்
   b. கிறிஸ்து மகிமையோடும், வல்லமையோடும் வரும் பொழுது ஆரம்பிக்கலாம்
   c. பரலோகத்திலிருந்து புதிய எருசலேம் வரும் பொழுது ஆரம்பிக்கலாம்

8. பாக்கியமான நம்பிக்கையின் முதல் கட்டம் எது ?

a. கிறிஸ்து வானமேகத்தில் இறங்கி வருவார்

b. கிறிஸ்து பூமிக்கு வரும் பொழுது அனைத்து மக்களும் பார்ப்பார்கள்

c. கிறிஸ்து இறங்கி வந்து பூமிக்கும் வானத்துக்கும் நடுவில் இருப்பார்

9. **பொருத்துக :–** நமது பாக்கியமான நம்பிக்கைக்கு வேதாகமம் கொடுக்கும் மற்ற பெயர்கள் என்ன ? (சரியான வசனத்தை வார்த்தைக்கு முன் எழுதவும்)

| | | |
|---|---|---|
| ------------- | ஜீவனுள்ள நம்பிக்கை | a. எபிரெயர் 6:19 |
| ------------- | நிலையான நம்பிக்கை | b. 1 யோவான் 3:3 |
| ------------- | மகிமையின் நம்பிக்கை | c. தீத்து 2:13 |
| ------------- | சுத்திகரிக்கும் நம்பிக்கை | d. கொலோசெயர் 1:27 |
| ------------- | ஆறுதலின் நம்பிக்கை | e. 1 பேதுரு 1:4 |
| ------------- | பாக்கியமான நம்பிக்கை | f. 1 தெசலோனிக்கேயர் 4:18 |

10. **பொருத்துக :–** ஒரு விசுவாசி பெறும் கிரீடங்கள் என்ன ? (சரியான வசனத்தை வார்த்தைக்கு முன் எழுதவும்)

| | | |
|---|---|---|
| ------------- | நீதியின் கிரீடம் | a. 1 கொரிந்தியர் 9:25 |
| ------------- | ஜீவ கிரீடம் | b. 1 பேதுரு 5:4 |
| ------------- | அழிவில்லாத கிரீடம் | c. வெளி. 2:10 |
| ------------- | மகிமையுள்ள வாடாத கிரீடம் | d. 1 தெசலோனிக்கேயர் 2:19 |
| ------------- | மகிழ்ச்சியின் கிரீடம் | e. 2 தீமோத்தேயு 4:8 |

11. **நிரப்புக :–** கிறிஸ்துவின் --------------------- நமக்கு பாக்கியமான நம்பிக்கைக்கான உறுதியைக் கொடுக்கிறது.

12. சங்கீதம் 24:9–ல் உள்ள எந்த வாக்கியம் நமக்கு பாக்கியமான நம்பிக்கையைக் கொடுக்கிறது ?

-----------------------------------------------------------------------------------

13. கிறிஸ்துவின் முதலாம் வருகைக்கும் இரண்டாம் வருகைக்கும் உள்ள வித்தியாசம் என்ன ?

முதலாம் வருகையில் -------------------- வந்தார். இரண்டாம் வருகையில் ------------------------- வெளிப்படுவார்.

14. பாக்கியமான நம்பிக்கை இரண்டு நிலைகளைக் கொண்டது என்பதை கோடிட்ட இடத்தில் நிரப்புக.

முதலாவது அவர் சபையை எடுத்துக் கொள்ளும்படியாக வானமேகத்தில் -------------------- வருவார். பிற்பாடு,

------------------ இந்த பூமிக்கு மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் வருவார்.

15. **பொருத்துக :–** கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்து ஒரு விசுவாசி எதிர்பார்க்கும் ஆசீர்வாதமான காரியங்கள் என்ன ? (சரியான வசனத்தை வார்த்தைக்கு முன் எழுதவும்)

| | | |
|---|---|---|
| ------------ | ஆண்டவர் விசுவாசிகளுக்காக வருவார் | a. 1 கொரிந்தியர்15:42–44 |
| ------------ | விசுவாசியின் சரீரம் மறுரூபமாக்கப்படும் | b. ரோமர் 8:17,18 |
| ------------ | கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் எழுந்திருப்பார்கள் | c. வெளி. 19:7 |
| ------------ | விசுவாசி கிறிஸ்துவை சந்திக்க வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுவார் | d. கொலோசெயர் 3:4 |
| ------------ | அவரின் மகிமையில் பங்கு பெறுவோம் | e. 1 கொரிந்தியர்15:51–53 |
| ------------ | நமது கிரியைகளுக்கான பலனைப் பெறுவோம் | f. வெளி. 5:10 |
| ------------ | விசுவாசிகள் ஆட்டுக்குட்டியானவரின் கலியாணத்தில் இணைக்கப்படுவோம் | g. வெளி. 21:1–4 |
| ------------ | விசுவாசிகள் கிறிஸ்துவுடன் பூமிக்குத்திரும்பி வருவார்கள் | h. 2 கொரிந்தியர் 5:10 |
| ------------ | விசுவாசிகள் கிறிஸ்துவோடு பூமியில் அரசாளுவார்கள் | i. 1 தெசலோனிக்கேயர் 4:17 |
| ------------ | விசுவாசிகள் புதிய வானத்தில் ஆண்டவரோடு வாழ்வார்கள் | j. 1 தெசலோனிக்கேயர் 4:16 |

16. கீழே உள்ள வசனங்களில், கிறிஸ்து பூமிக்கு வரும் பொழுது, நாம் எந்த அடையாளங்களைப் பார்ப்போம் ?

a. 1 தெசலோனிக்கேயர் 5:3 ------------------------------------------------------------

b. லூக்கா 17:26–30 ------------------------------------------------------------

c. 2 தீமோத்தேயு 3:1–5 ------------------------------------------------------------

17. கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தப்பட ஒரு விசுவாசி செய்ய வேண்டிய **ஐந்து** காரியங்களை வேதவசனத்துடன் குறிப்பிடவும்.

a. ------------------------------------------------------------

b. ------------------------------------------------------------

c. ------------------------------------------------------------

d. ------------------------------------------------------------

e. ------------------------------------------------------------

---

**அவசியமாக உங்கள் பெயரையும் முழு முகவரியையும் தெளிவாக எழுதவும்**

**பதிவு எண் :** ____________________

**முழு பெயர் :** ____________________

**முகவரி :** ____________________

____________________